சிவமயம்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத் ருசு] யாழ்ப்பாணம்:—தாரண ஸு மாசிமீ சஉ (1945 பெப்ரவரிமீ 15உ வியாழக்கிழமை) [இல அரு


## தேசீயப் போர் முன்னணியைக் கலைக்க வேண்டுமாம்!

### பொய்யர்கள் நிறைந்த போலியா?

சென்ற 10-ந் தேதி நடந்த இந்திய அசெம்பிளிக் கூட்டம் பரபரப்பு நிறைந்ததாக இருந்தது. கேள்வி நேரத்தில் ராய் கட்சியினருக்கு மாதம் ரூ. 13,000 கொடுக்கப் படுவதைப்பற்றி பல அங்கத்தினர்கள் கேட்ட சரமாரியான கேள்விகள் தொழில் அங்கத்தினர் டாக்டர் அம்பேத்காரைத் திணறவைத்துவிட்டன. தேசீயப் போர் முன்னணியைக் கலைத்துவிட வேண்டுமென்று முஸ்லிம்லீக் அங்கத்தினர் ஸேர். யாமின்கான் சென்ற கூட்டத்தில் கொண்டுவந்த தீர்மானத்தின் மீது விவாதம் அன்று மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

புது டில்லி

அத்தீர்மானத்தைத் தாம் திரும்ப எடுத்துக்கொள்ளுவதாயும் இந்த ஸ்தாபனத்தைச் சீர்திருத்தும் சம்பந்தமாக மார்ச் மாதத்தில் தன் முடிவை வெளியிடுவதாகவும் பிரசாரக் கர்த்தோர் மெம்பர் சுல்தான் அஹமத், ஸேர் அஹமதகானைக் கேட்டுக்கொண்டதற்கு அவர் இணங்கினர். ஆனால் அதைத் திரும்ப எடுப்பதற்குச் சபை சம்மதிக்கவில்லை. இதற்குக் காரணம் அரசினர் மசோதாக்கள் முதலியவற்றிற்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள நாட்களில் ஒருநாளை இதை விவாதிக்க அரசினர் ஒதுக்கிவைக்க மறுத்ததும், பிரசார அங்கத்தினர் தேசீய முன்னணிப் போர் சம்பந்தமாகத் தனது முடிவை இப்பொழுதே அறிவிக்கத் தயாராக இல்லாமலிருந்ததுமேதான். காங்கிரஸ் கட்சித் தலைவர் ஸ்ரீ புலாபாய் தேசாய் கூடத் தன் கட்சியின் பலத்தை இதற்கு அளித்தார். விவாதத்தின்போது ஸ்ரீ ஜமனுதாஸ் மேத்தா வழக்கம்போல காங்கிரஸைத் தாக்கிப் பேசினார். ஆனால் சர்தார் சாந்தசிங்கும் ஸ்ரீ சுவாமி வெங்கடாசலமும் அவர் பேசும்போது பல தடவைகள் இடைமறித்துக் கேள்விகளைக் கேட்டுத் துளைத்தனர்.

தேசிய முன்னணி இனியும் இருந்துவரவேண்டுமென்று அரசினரை ஆதரித்து ஸேர் கவாஜி ஜெஹாங்கீர், கியாஸ் உத்தீன், கைலாஸ் பெஹாரிலால், ஹூசேன்பாய் லால்ஜீ, முதலியோர் பேசினர். தேசியபோர் முன்னணியின் ஊழல்களை வெளிப்படுத்தி லீக்கட்சி அங்கத்தினரான சௌதரி பேசினர்.

தேசீய போர் முன்னணியைக் கலைத்துவிட வேண்டுமென்ற ஸேர் யாமீன்கானின் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சர்தார் மங்கள்சிங் பேசுகையில் கூறியதாவது:—

"தேசிய போர் முன்னணி அரசாங்க தாசர்கள் நிறைந்த ஒரு கூட்டம். இதில் அரசினரின் நண்பர்களுக்கே வேலைகளும், சிநேகபாவமுள்ள பத்திரிகைகளுக்குப் பணமும் கொடுக்கப்படுகின்றன. அரசினர் கட்சித் தலைவர் பேசினதிலிருந்து, இந்த ஸ்தாபனத்தின் அமைப்பில் சிறிது மாறுதலும், பெயரில் மாறுதலும் ஏற்படும் என்று தெரிகிறது. சபை இதை ஒத்துக்கொள்ளக்கூடாதென எச்சரிக்கிறேன். இது உடனே கலைக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்த வேண்டும்."

யுத்த முயற்சி, யுத்தத்திற்கு ஆள் திரட்டுவது போன்ற முக்கிய வேலைகளை இந்தஸ்தாபனம் செய்து வருவதாகவும் எனவே இதைக் கலைக்கக்கூடாதென்றும் திரு கியாஸ் உத்தீன் பேசினார்.

திரு. பத்ரிதத்த பாண்டே பேசியதாவது:—

'தேசிய அரசாங்கம் ஒன்றே திறமையுள்ள யுத்த முன்னணியை வைத்திருக்க முடியும். இப்பொழுதுள்ள ஸ்தாபனம் 'போலி" முன்னணி, பொய்யர்கள் நிறைந்த ஸ்தாபனம். இது நடத்தும் கூட்டங்களுக்கு சொற்பஜனங்களே வருகின்றனர். படையில், சேருவோர்களுக்கு புதுச் சப்பாத்துகளும், துணிகளும் நல்ல சாப்பாடும் கொடுக்கப்படும் என்று கூறப்படுகிறது. இமாதிரிப்படை கூலிப் படையல்லவாவென்று கேட்கிறேன்!

(வீட்டில் இருந்தால் ஏற்படும் துன்பங்களையும் படையிற் சேர்ந்தால் கிடைக்கக் கூடிய நல்ல பொருள்களையும் எடுத்துக்கூறிய ஹிந்துஸ்தானிப்பாட்டு ஒன்றை இந்த அங்கத்தினர் சபையில் படித்தார்.)

இந்தஸ்தாபனத்திற்காகக் கோடி ரூபாய் செலவழிக்கப் படுவதாகவும் ஆதலால் பலர் பிழைக்கின்றனரென்றும் எனவே இந்தஸ்தாபனத்தைக் கலைக்கக் கூடாதென்றும் திரு. கைலாஸ் பெஹாரிலால் கூறினர்.

ஸேர். கவாஸஜீ ஜஹாங்கீர் தீர்மானத்தை எதிர்த்துப்பேசுகையில் தேசீய போர்முன்னணி ஒருகுறிப்பிட்ட அரசியல் கட்சிக்காக உபயோகிக்காகூடாது என்பதைத் தான் ஒத்துக் கொள்வதாகவும், ஆனால் யுத்த முயற்சி விஷயத்தில் இருவித அபிப்பிராயங்கள் இருந்து வருவதாகவும் அதில் ஒரு சாரார் தேசீய போர் முன்னணி ஸ்தாபனம் பொய்ப் பிரசார இயக்கமென்று கூறி அதற்குச்செலவழிக்கும் பணம் வியர்த்தமென்றும் கூறி வருவதாகவும், இதைத் தான் ஒத்துக்கொள்ள முடியாதென்றும் கூறினர்.

திரு. ஜம்னுதாஸ் மேத்தா பேசுகையில் பல அங்கத்தினர்கள் அவரை இடைமறித்துக் கேள்விகளை கேட்டனர். அவர் பேசியதாவது:—

"தேசிய போர் முன்னணி இருந்து வரவேண்டும். பாஸிஸம், நாஸிஸம் இரண்டையும் எதிர்த்து யுத்த முயற்சிகளை ஆதரித்து வருபவர்களில் நான் ஒருவன். தேசீய போர் முன்னணி அரசியல்பற்றற்ற ஸ்தாபனமாக இருந்து வருமென்றே முதலில் உத்தேசிக்கப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்ட வசமாகச் சில மாகாணங்களில் உத்தியோகஸ்தர்களல்லாதவர்களைக் கொண்டு இந்த ஸ்தாபனத்தை நடத்த முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை, நம படைகளைக் கூலிப்பட்டாளம் என்று கூறுவது பொய். காங்கிரஸ் அதன் நாசவேலைக்கு 2 இலட்சம் பேரைக் கூடச் சேர்க்க முடியாமலிருக்கையில யுத்தத்தில் சேர 20 லட்சம் இந்திய போர் வீரர்கள் தாங்களாகவே முன்வந்திருக்கின்றனர். (சிரிப்பு) யுத்த முயற்சியை எதிர்ப்பது கோழைத்தனமும் சுயநலமும் கொண்டது. தேசீயபபோர் முன்னணி நல்லவேலை செய்து வருகிறது. இந்த முன்னணியால் அனு

தொடர்ச்சி 6ம் பக்கம்

### 10 சத நோட்டுகள் அகற்றப்படும்

இப்போது பழக்கத்திலிருந்து வரும் பத்துச்சத நோட்டுகளை அதிகாரிகள் விரைவில் எடுத்துவிட்டுப் பத்துச்சத நாணயங்களையே செலாவணிக்குக் கொண்டுவருவர் எனத் தெரிகிறது.

இந்தியாவிலிருந்து பெருந் தொகையான பத்துச்சத நாணயங்கள் இலங்கை நோட்டு செலாவணி கொமிஷனர் சபைக்கு இப்போது வந்து சேர்ந்திருக்கின்றன. ஆகவே புதிதாக வந்திருக்கும் இந்தப் பத்துச்சத நாணயங்களைப் பிரஸ்தாப சபை இங்குள்ள பல ரயில்வே ஸ்டேஷன்கள், தபாற்கந்தோர்கள், கச்சேரிகளுக்கு வழங்கி விரைவில் இந்த நாணயங்களைப் பழக்கத்துக்கு வரும்படி செய்வர். மேலும் புதிதாக வழங்கப்படவிருக்கும் இந்த நாணயங்களுக்குப்பதிலாகப் பிரஸ்தாப ஸ்தாபனங்களில ஒவ்வொரு நாளும் சேரும் பத்துச்சத நோட்டுகளைப் பொக்கிஷக் காரியாலயத்துக்கு அனுப்பி வைக்க வேண்டுமெனவும் இந்த ஸ்தாபனங்கள் கேட்கப்பட்டுள்ளன. இவ்வாறு சேர்க்கப்படும் பத்துச்சத நோட்டுகள் ஜனங்களுக்குத் திரும்பவும் வழங்கப்படமாட்டாது. இந்தப் பத்துச்சத நோட்டுகள் வெகு சிறிதாக இருப்பதுடன் விரைவில அழுக்காகியும் கிழிந்தும் போயும் விடுகின்றன. இது காரணமாகவே அதிகாரிகள் எவ்வளவு விரைவில் அந்த நோட்டுகளைச் சேர்க்கமுடியுமோ அவ்வளவு விரைவில சேர்க்க முயற்சி செய்துள்ளார்கள்.

கொஞ்ச காலத்திற்கு முன் பத்துச்சதநோட்டுகள ஐந்துசதநோட்டுகளுடன் தற்காலிகமாக பழக்கத்திற்கு வந்தன. ஐந்துசத பத்துச்சத நாணயங்களைச் சனங்கள் சளவாகச் சேர்த்து மறைத்துப் புழக்கத்துக்குக் கொண்டுவராத முறையில பூட்டிவைக்கத் தொடங்கியது காரணமாக ஏற்பட்ட நாணயக் கஷ்டத்தைநீக்கிக்கொள்ளவே அதிகாரிகள் பிரஸ்தாப நோட்டுகளை அச்சிட்டுப் புழக்கத்திற்குக் கொண்டுவந்தனர் என்பது ஈண்டு ஞாபகமூட்டத்தக்கது.

### ஜெனறல் பிராங்கோவிற்கு வின்ஸ்டன் சேர்ச்சில் பதில்

லண்டன் பெப் 10—

சென்ற நவம்பரில் ஜெனறல் பிராங்கோ சர்ச்சிலுக்கு எழுதிய கடிதத்தின் சாராம்சத்தையும் அதற்கு சேர்ச்சில் அனுப்பிய பதிலின் சாராம்சத்தையும் இன்று லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகையின ராஜீய நிருபர் வெளியிட்டிருக்கிறார்.

அந்த நிருபர் கூறுகிறபடி பிராங்கோ எழுதியுள்ள கடிதத்தின் சாராம்சமாவது:— யுத்தத்தை வெற்றிகரமாக நடத்தும் தங்கள் திறமையையும் தங்கள் நுண்ணிய அறிவையும் நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். ஐரோப்பாவில் வல்லரசுகள் மூன்றே யுள்ளன. அதில் ஒன்று பிரிட்டன்; மற்ற இரண்டு ஜெர்மனியும் ஸ்பெயினும். இப்போது அவைகளில ஒன்றான ஜேர்மனி தோற்றுப்போகும் நிலையிலிருப்பதால ரஷ்யாவின் அபாயத்தைச் சமாளிக்க ஸ்பெயினும் பிரிட்டனும் ஒன்றுபட வேண்டும்.

அந்நிருபர் கூறுகிறபடி சேர்ச்சில் அதற்கு எழுதியுள்ள பதிலின் சாராம்சமாவது:— பிரிட்டன், ஸ்பெயின் மக்களுடன் நேச உறவு கொண்டாடவே விரும்புகிறது. உங்கள அரசாங்கத்தைப்பற்றி நான் நல்ல வார்த்தை எதுவும கூறுவதற்கில்லை. வெகு காலமாக உங்கள் அரசாங்கம் எவ்விதம் நடுநிலைமையாக இருந்துகொண்டே மறைமுகமாகப் போரிலீடுபட்டது என எங்களுக்குத் தெரியும். நீங்கள் ஸ்பெயினுக்குள் ஜெர்மன் 5-ம் படைக்காரர்களுக்கு செய்த உதவியும் எங்களுக்குத் தெரியும். ஜெர்மனி வெற்றி பெறுவது நிச்சயம், அதை யாரும் தடுக்க முடியாது. ஜெர்மனியே வெற்றிபெற வேண்டியது நியாயம்' என நீங்கள் இதற்கு முன் கூறியதை ஞாபகமூட்ட விரும்புகிறேன். தாங்கள் எதிர்க்கச் சக்தியற்று இருந்த காலத்தில் சர்வ தேசங்களுக்கும சொந்தமான டாமஞ்சியர் துறைமுகத்தை உங்கள் அரசாங்கம் அநியாயமாக ஆக்கிரமித்துக் கொண்டதையும் நாங்கள் அறிவோம். எங்கள நேசநாடாகிய ரஷ்யாவுக்கெதிராகக கிழக்கு முனையிற் போரிட நீங்கள் படை சேர்த்து அனுப்பியதும் எங்களுக்குத் தெரியும.

1940 இல் பிரான்ஸ் வீழ்ந்தபோது ஸ்பெயின யுத்தத்தில் சேராமல் தாங்கள் தடுத்ததையும 1942 இல நாங்கள் வட ஆபிரிக்காக் கரையி லிறங்கியபோது தாங்கள தலையிட்டுப் பிரச்னை சிக்கலாகாமலிருந்ததையும் பாராட்டுகிறேன். பிரிட்டன் தன் அடிப்படையான கொள்கையின்படியே ரஷ்யாவுடன் நேசஉறவு கொண்டிருக்கிறது. யுத்தத்துக்குப் பின ரஷ்யாவுடன் நெருங்கி ஒத்துழைக்க வேண்டுமென்பதே எங்கள் விருப்பம். சமாதான மகாநாட்டில் ஸ்பெயினுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்படுமென எனக்குத் தோன்றவில்லை. உத்தேசிக்கப்பட்டிருக்கும் சர்வதேசப் பாதுகாப்புச் சங்கத்திலும அதற்கு ஸ்தானம அளிக்கப்படமாட்டாது என நினைக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதேல் லாமர ஞைமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணஹ
மாசிமீ சஉ வியாழக்கிழமை

## மூவர் கூட்டுறவின்பேறு

அமெரிக்க ஸ்தானாதிபதி யாகிய மிஸ்ரர் றூஸ்வெல்ற், பிருத்தானிய மந்திரி மிஸ்ரர் சேர்ஜில், ருஷிய சர்வாதிகாரியாகிய மாஷல் ஸ்ராலின் என்னும் மூவரும் கிறிமியாவிலுள்ள யல்ற்ரா என்னு மிடத்தில் ஒருங்கு சந்தித்து ஜர்மனியரைத் தோல்வியுறச் செய்யும் உபாயத்தையும் தோல்வியுற்ற பின் அவர்களுக்குச் செய்ய வேண்டிய தண்டனை அவர்களை அடக்கியாளும் முறை அவர்களை இப்போதைக்கு உலகத்திலே தலையெடுக்கச் செய்யாது தடுக்கும் உபாயம் முதலியவைகளைப் பற்றி ஆலோசித்து நிச்சயம் செய்துவிட்டனராம். ஜர்மனியரை அடக்கும் விஷயத்தில் இந்த மூவரும் பிரான்ஸிய அதிகாரிகளையும் இஷ்டமானல் தம்முடன் சேரலாமெனத் தெரிவித்திருக்கின்றனர்; இந்த ஐக்கிய ராச்சியங்களில் சீன இராச்சியமு மொன்றாகும் ஆயினும் இச் சந்திப்பினலே சீனருக்குப் பிரதானமான ஸ்தானங் கொடுக்கப்படக் காணேம்; சீனர் கிழக்குச்சாதியார் வேற்று நிறத்தின ரென்ற காரணமோ, இல்லையேல் மூவரு ளொருவராகிய ஸ்ராலின் யப்பானுடன் பகைமை பூணமையினல், அந்த யப்பானியருக்கு விரோதிகளான சீனரைத் தம் பக்கலிற் சேர்த்துக்கொள்ள வொண்ணுதென வெண்ணினரோ, இல்லையேற் சீனர் இப்பொழுதும் யுத்தத்திலே தோல்வியுற்று வருகிறார்க ளென்ற நோக்கமோ,யாதோ! அச்சீனருக்கு இக் கூட்டத்தில் விசேஷ தானம் கொடாமைக்கு நியாயம் யாதெனப் புலப்படவில்லை; ஆனற் காலகதியிற் காரணமறியலாகும். அகத்தி ஆயிரங் காய்த்தாலும் புறத்தியே புறத்தி யென்பது பழமொழி.

இந்த மூவருங்கூடி ஏகமனசாய் நிச்சயித்த நிபந்தனைகள் சிலவருமாறு:— குறித்த மூன்று இராச்சியத்தினருக்குரியனவாகிய கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை யென்னு மிவைக ளெல்லாம் ஒருங்கு சேர்ந்து நாற்றிசைகளாலும் ஜர்மனியுட் புகுந்து கடுஞ்சமர் புரிந்து ஜர்மனியரை அறவே தோல்வியுறச் செய்ய வேண்டும்.

ஜர்மனியரைத் தோல்வியுறச் செய்து எவ்வகையான நிபந்தனையு மின்றிச் சரண்புகச் செய்யவேண்டும்; பின்னர் ஜர்மனியி லுள்ள பெரும்பாகங்களை மூன்ருகப் பிரித்து இந்தமூவரும் ஆளுக்கொவ்வொரு பாகமாக நிர்வகித்துக் கொள்ள வேண்டும். மூன்று இராச்சியங்கட்கு முரிய இராணுவத்தலைவர்கள் ஜர்மனியின் பிரதான நகராகிய பேர்லினிற் கூடியிருந்து கொண்டு ஆகவேண்டிய சமாதான ஒழுங்குகளையும் அடக்குமுறையையும் ஒரு விசாரணைச் சங்க மூலமாக ஆராய்ந்து நிர்வகிக்க வேண்டும். பின்னர் இந்த மூவரும் கூட்டும் விசாரணைச்சங்கத்திலேபிரான்ஸிய அதிகாரிகளும் சீனஅதிகாரிகளும் அழைத்து யோசிக்கப்படுவர்.

ஜர்மனிய இராணுவத்தின் வலிமையையும் ஆதிக்கத்தையும் அறவே கெடுத்து ஜர்மனியருடைய தொழின் முயற்சிகளை யெல்லாம் ஒழித்து இந்த மகாயுத்தத்தை மூட்டி நடத்திய ஜர்மனிய குற்றவாளிகளை யெல்லாம் தண்டித்து "நாஸீ"க் கட்சியினரையும் நாஸிக் கட்சியினர் செய்த ஒழுங்குகளையும் நாசமாக்கிவிட வேண்டும். இந்த முப்பெரியாருஞ் செய்துகொண்ட யோசனைகள் சாலச் சிறந்தனவாகும்.

இவைகளை யெல்லாம் நிறைவேற்றிய பின்னர் எல்லாச் சாதியார்க்கும் பாதுகாப்பும் சமாதானவாழ்வும் உலக சுவாதீனமும் இந்த முப்பெரியார்மூலம் உதவப்படுமென்பதை எவரும் சந்தேகமில்லாமல் எதிர்பார்த்திருக்கலாம். ஆனல் இம்மூன் றதிகாரிகட்கு மிடையில் எக்காலத்தாயினும் எவ்வகையான பிணக்கும் நேராவண்ணம் இறைவன் திருவருள் புரிய வேண்டும்.

---

## அகில இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம்

10 2-45 சனிக்கிழமை பிற்பகல் 6½ மணியளவில் ஷை சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. வ. சிற்றம்பலம் (வழக்கறிஞர்) அவர்கள் தலைமையின்கீழ் நிர்வாகசபை கூடிற்று. பல பாகங்களிலிருந்தும் சங்கப் பிரதிநிதிகள் பிரசன்னமாயிருந்தனர்.

தலைவர், தொழிலாளர் மகத்துவம் எத்தகையதென்றும், இப்பொழுது நடைபெற்றுவரும் அரசியற் றிட்டங்களைப் பற்றியும் கூறிச் சர்வசன வாக்குரிமையின் அவசியத்தைப் பற்றிப் பின்வருமாறு விளக்கினுர்:—

இலங்கையின் பலபாகங்களிலும்அதிகமாகத் தொழிலாளர்கள் வசிக்கின்றனர். இத் தொழிலாளிகளில் அநேகர் படிப்பென்பதே யில்லாதோராவர். அரசாங்கத்திற்கு வரிசெலுத்தும் ஏழைத் தொழிலாளிக்கு; நாட்டின் செல்வத்தை விருத்தியாக்கும் பாட்டாளிக்கும் வாக்குரிமை யின்றேல் அரசியலில் எவ்வித தொடர்புமில்லை. ஏழைத் தொழிலாளி வாக்குரிமை யின்றேல் ஜனநாயகத்தை நிலைபெறச் செய்வதெப்படி? இவ் வாக்குரிமையைக் கொண்டே தொழிலாளி அரசியலில் பலவித நன்மைகளைச் செய்ய வேண்டும். 14 ஆண்டுகளாக இலங்கையில பெற்றிருக்கின்றுன். ஆகவே, சர்வசன வாக்குரிமை அத்தியாவசியமானதாகும்.

பின்பு உபதலைவர் பிறக்றர். V. சோமசுந்தரம் அவர்கள் பேசியதாவது:—

யாழ்ப்பாணத்தி லனேகர் சுருட்டுத் தொழிலையே ஜீவாதாரமாகக்கொண்டுள்ளார்கள். இத்தொழிலாளர்கள் எல்லோரும் ஐக்கியமாகச் சேர்ந்து பெரிய காரியங்களைச் சாதிக்க முடியும். தொழிலாளி தான் உண்மையில் அரசாட்சி செய்பவன். இனி, வருங்காலத்தில் தொழிலாளரே அரசியலை நடத்துவார்கள். ஆதலால் இத்தொழிலாளர்கள் யாபேரும் ஒருமூ சேர்ந்து முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும்; எனவும் விளக்கமாகக் கூறினுர்.

பின்பு காரியதரிசி ஆ. துரைராசசிங்கம் பேசியபொழுது, "சங்க மென்பது கூலி கூட்டவோ அன்றேல் கூலி குறைக்கவோ ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனமல்ல. ஒவ்வொருவரும் சத்தம் உரிமையைப் பெற்றுக்கொள்ள ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனமாகும் என்று கூறினுர்,

நிறைவேறிய தீர்மானங்கள

1. சர்வஜன வாக்குரிமை (ஏழைமக்களின அரசாணியான அரசியல் உரிமை) யை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தக் கூடாது.

2. வை. சி. சி. குமாரசுவாமி அவர்களின் அகால மரணத்திற்காக, அவர்களின் சுற்றத்தாருக்குச் சங்கத்தின அநுதாபத்தைத் தெரிவித்தல்,

---

## திருக் கலியாணப் படிப்பு

கீழும் மாசிமாசம் (ரு-ம் திகதி வெள்ளிக்கிழமை (16-2-45 கந்தமடம் கந்தபுராண படனத்தில திருக் கல்யாணப்படிப்பு மாலை 6 மணியளவில் நிகழவிருப்பதாலும அதையிட்டு விசேஷ பூசை ஆராதனை முதலியனவும் நடைபெறுவதாலும் சைவமக்கள் யாவரும் சென்று [illegible] படிப்பைக [illegible] யை பெறுவாராக.

---

# உலகம்பலவிதக் கதை

(முற்றொடர்— 39,

## "அயனெழுதியதை அழிப்பார்யார்?"

விசுவநாதனுடைய தாய் ஒருநாள் மத்தியானத்தின்மேல் தனது தமையனாகிய அருணசலம்பிள்ளையின் வீட்டிற்குச் சென்றாள்; அங்கே அவளைப் பெரியநாயகியும் விசாலாட்சியும் வேண்டியவாறு உபசரித்தனர்; ஏதோ கருமமாக அயல்வீட்டிற்குப் போயிருந்த அருணசலம்பிள்ளையும் சிறிது நேரஞ் சென்றபின் தம் வீட்டுக்கு மீண்டு வந்தவர் தமது சகோதரி அங்கே வந்திருப்பதைக் கண்டு "என் தங்காய் வெகு நாட்களாய் இந்தப்பக்கம்வாராமல்விட்டுவிட்டாய்"என்று விசாரத்தோடு வினவினர் "வீட்டுக் காவலாக விட்டுவர எவருமில்லை; தன்னந்தனியே எந்தக் கருமத்தையும் நான் பார்க்கவேண்டியிருக்கிறது; அதனல் இங்கே வர நேரமில்லாமற் போய்விட்டது" என்று கவலையோடு விடை கூறினள் விசுவநாதனுடைய தாய், தமது சகோதரி கவலைப்படுவதைக் கண்ட அருணசலம்பிள்ளை அவளுடைய கவலையின் காரணத்தைக் குறிப்பாலுணர்ந்து "தங்காய், என்ன செய்யலாம், நீயும் தனியே இராமல், எங்கள் குடும்பமும் தனித்துப்போகாமல் என மருமகனுக்கு எங்கள் பிள்ளையைக் கல்யாணஞ் செய்து வைக்கலாமென்று அந்தநாள்தொட்டு எல்லாவகையான முயற்சியுஞ் செய்து வந்தேன்; உன்னில் எவ்வகையான குறையுமில்லை; உன் மகன அப்படிச் செய்து வைத்தற்குக் "கொஞ்ச"மேனும் இடந்தரவில்லை; உனக்கு மாத்திரமல்ல, எனக்கும் என மனைவிமக்களுக்கும் இதனற் பெருங் கவலை; எனமேற் குறை பெண்ணுதே; இந்தப் பிள்ளையை விசுவநாதன் கல்யாணஞ் செய்து கொண்டு இல்லறத்தைக் கிரமமாக நடத்தினல் எல்லாருக்குஞ் சந்தோஷமாகத்தானே இருக்கும்; கையில் வெண்ணெய் வைத்துக் கொண்டு நெய்தேடுவார்போல வீட்டில் மாப்பிள்ளை இருக்க; நான் இப்பொழுது புறத்திலே மாப்பிள்ளை தேடிப் போகவேண்டியவனுனேன்; இனி உங்கள மகளைவிட்டு, சின்னயைச் சேர்ந்த என மைத்துனன் மேல பாசம வைத்திருக்கிறுளை; ஒன்றைக் கேட்கநேர்ந்து; இப்பொழுது அவள தனக்குக் கலியாணமே வேண்டாமென்று தாய்க்குச் சொல்லிவிட்டாளாம்; என் மைத்துனன் [illegible] இப்படியெல்லாம் [illegible] நேருமா? என்னசெய்யலாம்? அன்று அயன் எழுதிய எழுத்தை ஆரால் அழிக்க முடியும்......" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டார்; பின்னரும் அருணசலம்பிள்ளை தம சகோதரியைப் பார்த்து, "தங்காய்! தாரமுங் குருவுந் தலைவிதிப்படியாம்; அந்தக் காரணத்தைவிட்டு எங்கள [illegible] மருமகனைவிட்டு என குக கவலையில்லை [illegible] எனக்குப் பலவுமில்லை' என்று சொல்லிக் கவலைப்பட்டார், தங்கை [illegible] [illegible] தமையனைப் பார்த்து, "அண்ணு, என பிள்ளை [illegible] [illegible] கூடாத கூடிக் கெட்டுப்போயிருந் [illegible] ஆனல் அவன் இப்பொழுது சில காலமாக நல்ல [illegible] வந்து போயும் ஒழுக்கமாய் நடக்கிறுன்; இப்பொழுது என் [illegible] கூடாத கூட்டம கூடுவதுமில்லை; விட்டுவிட்டு வெளியே போவதில்லை; தான் செய்த பிழைகளைப்பற்றி எந்தநேரமுஞ் சிந்தனையோடு கூடியவனுகக் காணப்படுகிறுன் அண்ணு; அவன் இனித் திருந்தி நடப்பான்; "கெட்டார் தமையாரோ, கேடொருகால் நீங்காதோ"; உங்கள் பிள்ளை வேறு, என் பிள்ளை வேறென் றெண்ணுதீர்கள் அண்ணு; அவன் உங்கள வீட்டில் வந்து சேர்ந்துவிட்டால் திருந்தி நடப்பான்: என் மருமகளும் நல்ல விவேகி; இவள் அவனைத் திருந்தி நடக்கச்செய்வாள்; நீங்கள் புறக்கணித்தாற் பின் என பிள்ளையை எவர் ஏற்றுக்கொள்வர்! எத்தனையோ வாலிபர் முந்திக் கூடாத கூட்டங்கூடி நடவாதன நடந்து தம்மைப் பெற்றருக்கும மனைவியைத் தேடித் திரிந்தார்கள குடும்பபாரத்தைப் பொறுக்கவிருந் தாங்கள் முன் செய்த தீமைகளையெல்லாம் அறவே மறந்து அடங்கியொடுங்கி தமமை நம்பிவந்த மனைவியிடத்தும் பிற்காலத்துப் பிள்ளைகளிடத்தும் அன்புபாராட்டி தம்மைப்போல நல்லவர் வேறெவருமில்லையென்று சொல்லும்படி நடக்கிறூர்கள். அண்ணு, இவைகளெல்லாம நீங்கள அறியாத கருமமல்ல; என பிள்ளையென்று நான பொய் சொல்லவில்லை; முந்திப் பிழையாக நடந்தான; நான பட்டகலை [illegible] நகத்தத் தெய்வம் ஆக்கவிடாணம் இப்பொழுது அவனைத் திருத்தி நடக்கச்செய்து விட்ட [illegible] நான எண்ணங்கொண்டு இன்னும அந்த ஆண்டவனை வேண்டுகின்றேன; ஆதலால எல்லாவற்றையும யோசியுங்கள்" என்று ஆயாசத்தோடுங் கவலையோடுஞ் சொன்னுள்.

## "கணிகை ஆலிங்கனத்தால் தனநாசம்"

இவைகளையெல்லாம் தமது தங்கை சொல்ல அவதானித்த தமையன் பெருமூச்சு விட்டு, "தங்காய், நீ சொல்வதும நிசந்தான்; ஆனல் உன் மகன் இப்பொழுது திருந்தி நடக்கின்றுன் என்று நீ சொல்லுகிறுய்; நான் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன்; உனக்கு உண்மை தெரியாதிருக்கக்கூடும்; அவன் முன்னைக் காட்டிலும் இப்பொழுது இன்னும மோசமாகக் கெட்டுப்போனுன்; இது வீண் கதையல்ல; நம்பிக்கையான ஒருவர் சொல்ல நான கேட்டேன்; முந்தி அவன் கூட்டாளிமாருடன் கூடிக் குடித்து வெறித்துத் தெருவழியே திரிந்தானென்று கேள்விப்பட்டேன்; அவனுடைய கூட்டாளிமார் அவனை அவ்வளவோடு விடாமல், ஒரு தாசிவீட்டிலுங் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டார்களாம்; அவன் இப்பொழுது அந்தத் தாசி வீட்டே தஞ்சமென்று அலலும்பகலும அங்கேதான கிடக்கிறுனும்; இவைகளெல்லாம கேள்விப்படும் போது எனமனம எவ்வளவு படும்; நீயே யோசித்துப்பார்; இதனைக் கொண்டும ஆயத்துள அகப்படுவார் ஆருமுண்டோ? இப்படியெல்லாம அவன் கெட்டுப்போகாமலிருந்தால் என பிள்ளைக்கு நான வேறு வரனைத் தேடக் காண்பேனும நினைப்பேனு? அவனுக்கு இனிக் கல்யாணம எதற்கு? "செல்வமுங் குடியும் அழிவதற்கு ஏது [illegible] கணிகை ஆலிங்கனத்தால தனநாசம" என்று சொல்லுவார்கள்; விளக்கைப் பிடித்துக்கொண்டு கண்ணூறு விழுவாரைப் போல, இவைகளையெல்லாம அறிந்துகொண்ட பிறகும என பிள்ளை

தொடர்ச்சி 5ம பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டைவேலிக் கோவிற் பற்று

(வ. சி. குருசாமி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வடமராட்சி என்ற ஓர் பிரிவுண்டு. வடமராட்சியில் பலகோவிற்பற்றுக்கள் அதிகமாக உண்டு. அவற்றுள் நாம் இப்போது கட்டைவேலிக் கோவிற்பற்றைப்பற்றிக் கூறுவாம்.

## நிலையம்

A. எல்லை.

வடக்கு:- புலோலிக் கோவிற் பற்று
கிழக்கு:- குடத்தனைக்கோவிற்பற்று
மேற்கு:-உடுப்பிட்டிக்கோவிற்பற்று
தெற்கு:- 'துவெளி' எனப்படும் வயல்வெளி.

B. இப்பகுதி சுமார் யாழ்ப்பாணப் பகுதியில் இருந்து $18\frac{3}{4}$ மைல் தூரத்திலும் பருத்தித்துறையில் இருந்து $1\frac{1}{4}$ மைல் தூரத்திலும் உள்ளது.

## விஸ்தாரம்

இவ்விடம் சற்றேறக் குறைய 25 ச. மைல் வட்டாரத்தை அடக்கி இருக்கின்றது.

அட்சம்: சுமார் 9 பாகை 45 கலை, தேசாந்தரம் சுமார் 80 பா. 15 கலைகளுக்கிடையில் உள்ளது என்று கூறலாம்.

## சுகாதாரம்

A. உஷ்ணம், மழை:- மாசிமீ சாதாரண சூரிய உஷ்ணம் உண்டு. பங்குனி-- ஆடி கடுமையான வெயில் மழையே கிடையாது. காற்று வீசுவது குறைவு. புழுக்கம் அதிகம் உண்டு. ஆனிமாதம் ஆவணி சோழகக் காற்று மாறி வீசுகின்றது. இப்போது முந்திய காலத்தில ஏற்பட்ட கஷ்டங்கள் இல்லாது ஒழிகின்றது. ஆடிமாசம் அதிகபுயல் உண்டாகின்றது. இதனால் அநேகசேதம் ஏற்படுகின்றது. கார்த்திகை மார்கழிமாசம அதிகமழை பெய்கின்றது. 80'' உண்டென்று கூறலாம். பின்பு தனித்தனி சாரல்களைப் பற்றி நோக்குவாம்.

புரட்டாதிமாசம் — சித்திரை வரையும் வாடைக்காற்று வீசுகின்றது. இக்காற்று அதிகுளிரானது இக்காற்றுடன் மழை அதிகம் உண்டு. வைகாசிமாசம் தொடக்கம் ஆவணி வரையும் சோழகக் காற்று வீசுகின்றது. புரட்டாதிமாசம் தொடக்கம் பங்குனிமாசம் முடிய வாடைக் காற்று வீசுகின்றது. மழை வருஷிக்கும் தருணங்களில் காற்றுகள் மாறி மாறி வீசுகின்றது. மழை பெய்யும் காலத்தில் பெரும்பாலும் மாறுதல் அடையும் காரணங்களில் கச்சான் காற்றே தலைசிறந்தது இக்காற்று 'சுலய' பெருகுகின்றது என்று கூறுவர் நாட்டார்.

## பனி

கார்த்திகைமாசம் தொடக்கம் மார்கழிமாசம் வரையும் சிறிது பனி காணப்படும். தைமாசம்மாசிமாசங்களில அதிகபனி உண்டு அதற்குக் காரணம வெயிலின் அதிகமென்று பலர் கூறிக்கொள்வர்.

## மழை

சராசரியாக 56''—75'' என்று கூறலாம். உஷ்ணம் 82°F என்று கூறலாம். உச்சகாலம வட அட்சம் 10°க்கீழ் உள்ள இடமேயாகும். சித்திரைமாசம் 28ந் திகதி ஆவணி 31ம் திகதிகளிலுமாகும்.

## இயற்கைத்தோற்றம்

பொதுவாக பூமிசாஸ்திரவல்லார் யாழ்ப்பாணத்தையும் அதன் பகுதியையும் யாழ்ப்பாணத் தட்டையிலேதான் அடக்கினர். இப்பகுதி சுண்ணக்கற்பாறைப் பிரதேசமாய் உள்ளது. இடையிடையே மணற் பிரதேசமும் உண்டு. கடல் மட்டத்திலிருந்து சுமார் அயல் தேசங்கள் (பிரிவுகள்) பெரும்பாலும் அல்வாய்ப் பகுதி 30 மைலுக்கு உட்பட்டவை. வதிரியில் 30 முழக் கிணறுகளும் உண்டு. பருத்தித் துறைபோன்ற இடங்களில் 15 முழம்—6முழம் வரையிலும் கிணறுகள் உண்டு. நம் தரையைக் கூறுபாடாக்கினால், மணல், களி, கோளாங்கல், சுண்ணாம்புக்கல், நாய்க்களி, சல்லிக்கல், வைரக்கல் என்பவை காணப்படுகின்றன. இப்படைகளைத் தாண்டி மட்பாறை பார்ப்பின் நீர் காணப்படும்.

## லோகங்கள்

நம் தரைப்பகுதியை நிலநூல் ஆராய்ச்சி வல்லார் ஆராய்ந்தபிரகாரம் இரண்டு பிரதான உலோக வகை உண்டெனக் கூறுகின்றனர்.

I. சிலிக்கா, II. அப்பிரகம்

இப்பொருட்களை அதிக சுலபமாக எடுத்துக்கொள்ள முடியாமையால் இன்னும் இப் பொருட்கள் எடுக்க முடியாதவர்களாய் இடர்ப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் (கிணறு ஆழும்)போது அப்பிரகம் என்ற லோகம எடுக்கப்படுகின்றது.

## மிருகம், பறவை

I. இவற்றை நான்கு பிரிவாகப் பகுக்கலாம். கமக்காரருக்குவிசேஷ உதவிபுரிவன, II. சீவியஞ்செய்வோருக்கு உதவி புரிவன, III. தேசாந்தரம் திரிபவை, IV. தீமைகளை உண்டாக்குவன.

i. மிருகவகையில்:- எருதுமாடு, பறவை வகையில்:- களனிக்குருவி, கரிக்குருவி, சீவபிராணிகளில் மண்புழு.

ii. மிருக வகையில்; பசுமாடு, எருதுமாடு, ஆடு (a) வெள்ளாடு b) செம்மறியாடு, முயல். பறவை வகையில்:- தாரா, கோழி.

iii. தேசாந்திரம் திரியும் பட்சிகள்:- ஆந்தை, கொக்கு, பருந்து, கழனிக்குருவி, கரிக்குருவி, வெடிவாற் குருவி.

iv. தீமைபுரிவன: நீர்நிலையில்:- நீர்ப்பாம்பு, தரையில்: கொடிய பாம்புகள், நரி, சிறுத்தைப்புலி மிகவும் அபூர்வமாகக் காணப்படும்.

## தாவரம்

இப்பகுதி ஆனலும் ஈரலிப்புடைய சுகாதியப் பகுதியில் அடக்கப்பட்ட பிரதேசமாய் இருத்தலால் ஓங்கி வளர்ந்த வேம்பு, ஆல் போன்ற புறவளர் விருட்சங்களும், தென்னை கமுகு போன்றவையும் யாழ்ப்பாணத் தேவதாரு எனச் சிறப்பித்துக் கூறப்படும் ஒற்றைப் பருப்புத் தாவரங்களும் உண்டு. இத்தாவரங்கள் பெரும்பாலும் மனிதருக்குப் பிரயோசனம் தருகின்றன. சற்சில இடங்கள் புல்வெளி நிலங்களாகவும் வேறுசில இடங்கள் சிறுபற்றைக் காடுகளாகவும் காணப்படுகின்றன. புலநிலங்களில் மந்தைகள் மேய்க்கப்படுகின்றன. சிறுபற்றை நிலங்களில் காட்டுக்கோழி, முயல் முதலிய சிறிய பிராணிகளை வேட்டை ஆடுகின்றனர்.

## விளைபொருள்

இப்பகுதியில் $\frac{1}{2}$ப் பங்குக்குச் சற்றுக் குறைந்த பகுதி கமச் செய்கை நிலமாக இருக்கின்றது. $\frac{1}{4}$ பங்கு வயல்நிலமாக இருக்கின்றது. 10/1 பங்கு பற்றைக் காடாக இருக்கின்றது. ஏனைய பகுதி வெளியாகக் காணப்படுகின்றன. தோட்ட நிலங்கள் அப்பகுதியாரின் சீவியத்தின பெரும் பகுதியைக் கொண்டுள்ள ... இல்லை. இப்பு... (நெல்)... பட்டணப்பட்டி, குருநாகல், கண்டி போன்ற இடங்கட்கு அனுப்பப்படுகின்றது. அடுத்தபடியாக நாம் எடுத்துக்கொண்டால், தினை, சாமை, குரக்கன், சணல், எள்ளு, பயறு போன்ற உணவு வர்க்கமான நெற்றினத் தாவரமுப் வகையென எனவும் எடுக்கலாம். இப்பகுதியில் உண்டாக்கப்படுபவையின் பிரயோசனம் இப்பகுதிக்கே போதியதாகும். இப்பொருட்களின் விலைமதிப்பின்படி வியாபாரம்செய்யுமிடங்களையும் அப் பொருட்கள் கொண்டுசெல்லப்படும் மார்க்கங்களையும் பின்பு கவனிப்பாம்.

காய்கறிவகை ஏராளமாகச் செய்யப்படுகின்றன. இவைகளுள் விசேஷமானவை, பயிற்றங்காய், பாகற்காய் போன்ற காய்வகைகளும், வத்தகைப்பழம், வெள்ளரிப்பழம் தக்காளிப்பழம் போன்ற பழவகைகளுமாகும். விசேஷித்த தாவரமாக இப்போதும் நன்கு மதிக்கப்படுவது பனைமரமே; இதன் பிரயோசனம வேறு எவ்வித தாவரத்திலும் இல்லை என்றே கூறலாம். அதன் பிரயோசனத்தைப் பற்றி மனித வாழ்க்கையும் பயனும் என்ற பகுதியில பார்ப்பாம.

## சாதி

இப்பகுதியில் உள்ளவர்கள் தமிழரே. சிங்களவர் 500 பேருக்கு 2 பேர் என்று கூறலாம். அவர்களும் தொழிலின்பொருட்டு இங்கு வந்து குடியயமிபோரவர்.

## சமயம்

நான்கு வருணத்தை யுடையவர் இப்பகுதியில் இருக்கின்றனர்.

(1) தமிழர் (சைவர்) 100க்கு 70% எனலாம்
(2) கிறீஸ்தவர்கள் 100க்கு 20 பேர் எனலாம்
(3) அ. மெ. மி. கிறீஸ்தவர்கள் 100க்கு 6% எனலாம்
(4) ஏனைய பிறமதத்தினர் 100க்கு 4% எனலாம்.

இவர்கள் தாம் வழிபடுவதற்கு ஆங்காங்கு தேவாலயங்கள் உண்டு அவைகள் பின் கூறப்படும்.

## குடிசனம்

பெரும்பாலும் யாழ்ப்பாணத்தைப்போல் $\frac{1}{2}$ பங்கு சனங்களை யுடையது.

$$\frac{45708}{2} = 2\cdot 854$$

## போக்குவரத்து வசதி வியாபாரம்

5 பெரிய பாதைகள் உண்டு. அவற்றில் 2 குறக்குறோட்டுச் சங்கத்தாராலும், 3 P. W. D. சங்கத்தாராலும் நடத்தப்பட்டு வருகின்றன.

1. பருத்தித்துறை-நெல்லியடி
2. நெல்லியடி-கலிகை-குடத்தனை
3. கலிகை-பருத்தித்துறை
4. கலிகை-நெல்லியடி-யாழ்ப்பாணம்
5. கலிகை-சாவகச்சேரி

இப்பாதைகளே இவர்களது வியாபாரத்துக்கு ஏற்ற உதவியாக இருக்கின்றது. இப்பகுதியில் நடக்கும் விவசாயத்தின் பெரும்பகுதி 3 பெரிய சந்தைகட்குப் போகின்றது. உள்ளூர்ச் சந்தைகளாகிய, கோயிற்சந்தை, நெல்லியடிச்சந்தை முதலியவற்றிற்கும் வெளி (அயல்) ஊர்ச் சந்தைகளாகிய பருத்தித்துறை, சாவகச்சேரி சந்தைகட்கும் முன் கூறிய பாதைகள் மூலம் பொருட்கள் கொண்டுபோகப் பட்டு வியாபாரம் நடத்தப்படுகின்றது.

## மனித சீவியம்

இப்பகுதியை இரண்டு பகுதிகளாகப் பகுக்கலாம்.

(1) a. வயல்வேலை, b. தோட்டவேலை, c. மந்தை வளர்க்கல்:

(2) a. சிற்பவேலை, b. சுருட்டு வேலை, c. மட்பாண்டவேலை, d. தச்சுவேலை, e. பன்னவேலை.

A. வயல்நிலம்: இப் பகுதியில் கால் பங்கு வயல்நிலமாக உபயோகிக்கப்படுகின்றது. பூநகரி, கரைச்சி போன்ற இடங்களைப் போன்று நதி, குளம் இவற்றின் உதவியால் நெல் விளைவிக்க முடியாது மழையை நம்பியே நெல் விதைப்படுகின்றது. நெற் செய்கைக்கு ஏற்றதரைகளில் ஒன்றாய் மதிக்கப்படுகின்றதேனும் நீரின்வசதியீனத்தால் நெல்விளைவு குறைவு; எரிவான், மாலில், போன்ற இடங்கள் நெற்செய்கையில் விசேஷமுடைய இடங்களாகும்.

(B) தோட்டவேலை: செம்மண் சேர்ந்த தரையும்: இருவாட்டி, மணல், களி, நிலங்களும், சுண்ணக்கற்பார்ப் பிரதேசப் பகுதியும் இடையிடையே காணப்படும் சுண்ணத்தரைப் பகுதியில் தக்காளி, வெண்டி, போன்ற பயிர்களும்; இருவாட்டி மணல், வெள்ளரி, கத்தரி, வற்றாளை, வத்தகை, பாகல், புடோல் போன்றனவும் விளைவிக்கப்படும்.

இருவாட்டிக் களிநிலத்தில், கிழங்குவகை, புகையிலை, தினை, சாமை, சணல் போன்றனவும செய்கைபண்ணப்படுகின்றன. கணற்று நீரின் உதவி கொண்டே இப்படியான விளைபொருட்கள் உண்டாக்கப்படுகின்றன.

(C) மந்தை வளர்த்தல்: முன் புல்நிலங்கள் உண்டு என்று கூறினேன். அப்புற்பாப்பு நிலங்களில் ஆடு மாடு மேய்க்கப்படுகின்றன. மழை இன்றேல் இம்மந்தை வளர்த்தற் தொழிலும் அதிகஷ்டமானதாகும். இவ்விடங்களில் இருந்து 'புல்' வெட்டி வியாபாரம் செய்யப்படுகின்றது.

IIம் பகுதியை ஆராய்வாம்:—

(அ) சிற்பவேலை செய்வோர் மிகுந்த கெட்டிக்காரர் அவர்கள் செய்த வேலைகள் இன்றும் நமக்குக் கண்கூடாகச் சான்று பகரும் விசேஷித்த இடங்கள் உண்டு. இவர்கள் துன்னாலை வடக்கு, புலோலி தெற்கு, குடத்தனை, காணவாய் போன்ற இடங்களில் இருக்கின்றனர்.

(ஆ) சுருட்டுவேலை: இப் பகுதியார்களில் சிலர் பிறரிடம் வியாபாரஞ் செய்து இத்தொழிலைக் கற்றனர். இவர்கள் சுருட்டுக்கு உகந்த புகையிலையை உண்டாக்கிச் சுருட்டைச் செய்து வியாபாரமாக மலைநாட்டுப் பகுதியாகிய கண்டிவதுளை போன்ற இடங்கட்கு அனுப்புகின்றனர்.

(இ) மட்பாண்ட வேலை:- இப் பகுதியில் உள்ளவர்கள் அதிககெட்டிததனம் உடையவர்கள் இவர்கள் இந்தியாவில் செய்யப்படும் முறைகளை அனுசரித்து இத்தொழிலை நடத்துகின்ற சிலர் 'கொட்டியாபுரம்' திருகோணமலை முதலிய இடஞ் சென்று இத்தொழிலைச் செய்கின்றனர். இவர்களில் விசேஷித்தவர்கள் துன்னாலை வடக்கு, கரணவாய், மாதனை போன்ற இடங்களில் இருக்கின்றனர்.

(ஈ) பன்னவேலை: பன்னவேலையில யாழ்ப்பாணக் குடாநாட்டில தலைசிறந்தவிடம இப்பகுதியேயாம். பனை ஓலையினால் பலவித அழகான வேலைகளைச் செய்கின்றனர். இப்பொருட்கள் பெரும்பாலும் புறநாடுகட்கு அனுப்பப்படுகின்றன.

தொடர்ச்சி 6ம் பக்கம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது குறை

"கானப்ப்ரியை"

"ஒருதேசம் தன் உணர்ச்சிகளைப் பல கலைகளின் மூலம் வெளியாக்கு வதனாற்றான் தன் பெருமையின் உச்ச நிலையை அடையமுடியும். அக் கலைகளில் முக்கியமானது இசையே. இசை செவிக்கு இன்பங் கொடுப்பது மட்டும் அல்ல; ஒரு தனி மனிதனுடைய மனதைக் கவர்ந்து உள்ளத்து உதிக்கும் உணர்ச்சிகளைத் தூண்டி தெய்வீகத் தன்மையையும் அளிக்கிறது. தனி மனிதனுக்கே இத்தகைய நன்மை அளிக்குமானால் ஒரு நாட்டு மக்கள் அனைவர்க்குமே என் நன்மையை அளிக்கமுடியாது?" என்று ஸ்ரீ. பி. டி. ராஜன் அவர்கள் சில நாட்களுக்குமுன் சென்னையில் கூடிய தமிழிசை மகாநாட்டிற் கூறியதை அன்பர்கள் பலர் அறிந்திருக்கலாம். அதை மீண்டும் இலங்கை மக்கள் நினைவுகூர்வார்களாக.

பல்லாயிரம் வருடங்கட்கு முன் வாழ்ந்த நம் பண்டைத் தமிழரே என் அரசரும் கூட அருங்கலை விநோதராயிருந்து இயல், இசை நாடகம் எனும் மூன்றையும் கண்ணேபோற் சுருதி வளர்த்தனர். மாதவியின் நர்த்தனத்தின் மாண்பு தான் என்னே! உண்மையான நடிப்பு நமதுள்ளையும் உயிரையும் ஒருங்கு உருக்குகின்றதல்லவா? அதனலயிதது நம்மையே மறந்து விடுகின்றோம். இந்தத் தெய்வீகக் கலை அதாவது நாட்டியக்கலை பின்னர் ஞானமற்றதால் லொழுக்கமற்ற பொது மகளிர் இடத்துச் சிக்கி அதன் உயர்வுக்குப் பங்கம் ஏற்பட்டது, அதை அழிய விடாமல் அதைக் கௌரவித்து உயிர்கொடுத்து வளர்த்துவரும் உயர்ந்த கைங்கர்யத்தை "ஸ்ரீமதி ருக்மணி தேவியும், ஸ்ரீ உதயசங்கரும், ஸ்ரீ கோபிநாத்"தும் செய்துவருவது நம நலலதிர்ஷ்டமென்றே கூறலாம்.

நம் தாய்நாடு எவ்வளவோ காரியங்களில் உலகுக்கே வழிகாட்டியாயிருந்து முன்னேறி வருகின்றது, அவ்வாறிருந்தும் அதன் முழுத்தைக வாகிய சில குறைகள் ஓரளவுதானும் தீர்ந்தபாடில்லை. வாழ்வின் உயர்ந்த இலட்சியங்களைத் தூர வைப்பதனாலேயே நாம் கலாசாரத்தில மிகப் பின்னணியில் நிற்கிறோம் எனலாம்.

காலத்துக்குக் காலம் தாய் நாட்டு இசைவாணிகளும் கலைவாணர்களும் நம நாட்டிற்கு வந்து நம்மை மகிழ்விக்கின்றனர். நாம் எவ்வளவு பணம் கொடுத்துக் கேட்கவும் பார்க்கவும் தயாராய் உள்ளோம். அவ்வளவில் நம்முடைய லக்ஷியம் பூர்த்தியாகி விடுகிறதா! ஸ்ரீமதி எம். எஸ். ஐப் போலும், ஸ்ரீ கோபிநாத்தைப்போலும் நாம் வராவிட்டாலும் நம் ஆனந்தத்திற்காகவேனும் ஆத்ம லாபத்திற்காகவேனும் இசையும் ஓரளவு நாட்டியமும் பயில வேண்டாமா? இதில் இதுவரை நாம் முன்னேறாமல் இருப்பதற்குக் காரணம் நம் நாட்டுத் தலைவர்கள் பெரியோர்களின் அஜாக்கிரதையல்லவா! ராஜா சேர் அண்ணாமலைச் செட்டியாரைப் போன்ற நல நோக்கமுள்ள ஒருவர் பொருளிட்டாவிட்டாலும் மனங் வைத்தால் போதுமே!

சில மாசங்கட்கு முன்னர் தம் தெய்வீக நாட்டியக் கலையால் எம்மைப் பிரமிக்கச்செய்த 'கோபிநாத்' கோஷ்டியாரைப் பார்த்தபோது எத்தனை எத்தனையோ உணர்ச்சிகள் தோன்றின; அந்தக் கோஷ்டியாரின் 'பாவம்' மிகுந்த நடிப்பு எம மையெல்லாம் எங்கெங்கோ கொண்டுசென்றன. உத்வேகப்படுத்தின. "இப்படி நம் நாட்டுச் சிறுவர் சிறுமியரும் பாட ஆட முடியாதா?" என்று மனந் துடிதுடித்தது. எத்தனையோ பேர்வழிக விடமும் கூறிக் குறைப்பட்டேன். என்ன ஆச்சரியம்! என் அபிலாஷை நிறைவேறப் போவதற்கான அறிகுறி ஒன்று சமீபத்தில் வெளியான பத்திரிகையில் புலப்பட்டது. கல்விச் சபையாரே மனமுவந்து நடனக் கலைக்காய தனிக்கலாசாலை ஒன்றை நிறுவத் தீர்மானித்தது எமமவரின் நல்லதிர்ஷ்டமே. இத்துடன் இசைக் கலைக்கும் ஒரு தனிக் கலாசாலை நடனக் கலாசாலையுடனே அன்றி வேறாகவோ அமையவேண்டியதும் மிக அவசியம்.

இப்பிபாதசாலைகளில்வனைய பாடங்களைப்போல இசையையும் ஒரு பாடமாகச் சேர்த்துள்ளனர் கல்விப் பகுதியார். ஆனால் நாம் விரும்பும் அளவிற்கு அது பூரணமானதன்று. அது அளிக்கக்கூடியதுமன்று, உண்மையான அபிவிருத்தி ஏற்பட வேண்டுமானால் இசைக்கும் நாட்டியத்திற்கும் எனத் தனிக் கலாசாலையோ வேறுவேறு கலாசாலையோ ஏற்படவேண்டும். இது சாலவும் பொருத்தமுடையதென்பதை எவரும் ஒப்புவர். ஆகவே வித்தியா பகுதியாரோ வேறு பொதுநலம் விரும்பியவர்களோ மனம் வைத்தால எதுவும கைகூடும். கலாசாரத்திலும் முன்னணியில விளங்குவோம். வருங்காலச் சிறுவர் சிறுமியரும் ஆனந்த வாழ்க்கையை அநுபவிப்பர்.

நம் இலங்கையிலும் சங்கீதத்தின் பெயரால் எத்தனையோ சங்கங்கள்-சபைகள்—மண்டலங்கள் தோன்றியிருப்பதாய்க் கேள்வி. அவைகள் இதுவரை ஏதாவது உருப்படியான எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. இந்தச் சங்கங்கள் எல்லாம் தமக்குள் ஒன்றுக்கொன்று மனமுடைபட்டு போட்டியும் பொறாமையும் மனக்கசப்பும் உள இடங் கொடுக்கின்றனவே அன்றி ஆக்க வேலைக்கு இடையூறாய் இருக்கின்றன.

கொழும்பிலே "வானொலி இசை மண்டலம்" ஒன்று ஸ்தாபனமாகி ஒருவருட பூர்த்தி விழாவும் கொண்டாடப்பட்டாயிற்று. பல கனதனவான்களும் இசைவாணிகளும் இசைவாணர்களும் சேர்ந்து திருவிய கைங்கர்யத்திற்கு எத்தனையோ நல் உபகாரிகள் மனமுவந்து பொருளுதவியதாய்க் கேள்வி. திருவிய அன்று ஆசீர்வாதகமாக ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமி விபுலாநந்தர் அவர்களும் சிலப்பதிகாரத்தில் கண்ட இசை நுட்பங்களை ஆராய்ந்து தாம் அமைத்த 'யாழை'யும் அங்கு வைத்துப் பேசினார் எனத் தெரிகிறது. நல்லகாலம் பிறந்துவிட்டதாகவே நாமும் கனவு கண்டோம். ஆனால் எதுவும் நடக்கவில்லை. அதிற் சேர்ந்த தனசொத்தையே மூலதனமாக வைத்துக் கொண்டு—கலைவிருமபிகளின உதவி பெற்று நாம் விரும்பும் தனி இசைக் கலாசாலையை ஏதேனும் ஓரிடத்தில் ஏற்படுத்தலாமே!

சிறந்த ஆசிரியர்கள் கிடைக்காமையால 'இசைக் கலாசாலை' ஒன்று நிறுவுவதைப் பின் போட்டுள்ளதாக இசை விருப்புடைய ஒருவர் கூறியது என் காதிலும பட்டது. அவரைப்போல இன்னும் பலர் இசைக் கலை அபிவிருத்திக்கு மனநிற நிட்டம் போட்டுக்கொள்ளலாம். இந்த விஷயத்தில் .... தாய்நாட்டில இருந்து வந்தவர்களும் உள்ளூர் வாசிகளுமான தேர்ந்த ஆசிரியர்கள் இருக்கின்றார்களே! வருடாவருடம் அண்ணாமலைச் சர்வகலாசாலை போன்ற கலாசாலைகளிற் பயிற்சி முடித்து வந்துகொண்டிருக்கின்றனர். இன்னும் வேண்டுமானால் கொஞ்சக் காலத்திற்கு மேற்படி சர்வகலாசாலையாரிடம் பேராசிரியர் ஒருவர் எமக்கு வழிகாட்டத் தரும்படி கேட்கலாம், அவர்கள் தாராளமாய் முன்வருவர். இலங்கை மாணவ மாணவிகள் சென்னைக்கும் சிதம்பரத்திற்கும் சென்றும் சிரமமும் .... தீர்த்துவிடும். தேச .... முன்வருவோர் கலை ஆக்கங் கருதுவோர் கவனிப்பார்களாக.

# கந்தபுராணத்திலுள்ள சில அரும் பாடல்கள்

(திரு. சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்)

ஆதியும் நடுவு மீறு மருவமு முருவு மொப்பும்
ஏதுவும் வரவும் போக்கு மின்பமுந் துன்பமின்றி
வேதமுங் கடந்து நின்ற விமலவோர் குமரன் தன்னை
நீதால் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்கவென்றார்.

இப்பாடலைப் பின்வரும் அப்பர் தேவாரத்தோடு ஒப்பிடலாம்:—

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சிமயானத்தான் வார்சடையா னென்னினல்லான்
ஒப்புடையனல்ல னொருவனல்ல னோரூரனல்லன் ஒருவனில்லா
அப்படியு மந்நிறமு மவ்வண்ணமு மவனருளே கண்ணாகக் காணினல்லால்
இப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத் தனிவனிறைவனென்றெழுதிக் காட்டொணாதே.

வாலிதா மதிச் சடிலமும் பவளமால் வரையே
போலு மேனியு முக்கணு நாற்பெரும் புயமும்
நீல மாமணிக் கண்டமுங் கொண்டு நின்றனனால்
மூல காரண மில்லதோர் பராபர முதல்வன்.

மைக்களமு மான்மழுவும் வரதமுடனபயமுறும்
மெய்க்கரமும் நாற்புயமும் விளங்குபணிக் கொடும்பூணும்
செக்கருமு மதிச்சடையுஞ் சேயிழையோர் பாகமுமாய்
முக்கணிறை யாங்காண முன்னின்றே யருள்புரிந்தான்.

இவ்விரு பாடல்களை யொட்டியே பின்வருங் கருவையந்தாதிச் செய்யுள்கள் எழுந்தனபோலும்:—

உரகாபரணத் திருமார்பு முமையொப்பனையா ளிடப்புறமுஞ்
சிரமாலிகையும் புரிசடையுஞ் செய்யவாயுங் கறைமிடறும்
வராபயமும் மழுமானும் வயங்குகரமு மலரடியுங்
கருவா புரியான் வெளிப்படுத்திக் காட்டிக்கொடுத்து நின்றானே.

சீரணி கொன்றைச் சடைக்காடு முக்கண்ணுஞ் செம்முகமும்
காரணி கண்டமும் நான்குதிண் டோளுங் கருவைபிரான்
வாரணி யென்முலை யோப்பனை பாகமும் வணங்கவலந்
தோணி செய்போற் அடைந்தாரு மென்னெஞ்சு கூடங்கொண்டனவே.

பின்வரும் குளத்தூர்ப் பதிற்றுப்பத்தந்தாதிச் செய்யுட்களும் இங்கே உற்று நோக்கற்பாலன:—

கடியார்திதழிச் சடைமுடியுங் கண்கள் மூன்றுங் குழைகையும்
வடியார்சூலத் தனிப்படையும் வரைநேர்புயங்க ளொருநான்கும்

பொடியார் நுதலுந் திருமுகத்தின் பொலிவுங்காட்டி யுளம்புகுந்தான்
அடியார் வழுத்தத் திருக்குளத்தூ ரமருங் கருணைப் பெருமானே.

கார்கொண்ட மணிமிடறுங் கருணைபொழி விழிமூன்றும்
நீர்கொண்ட சடைமுடியு நிலவொழுகுங் குழைகையுஞ்
சீர்கொண்ட முகப்பொலிவுந் திருக்குளத்தை நகராளன்
ஏர்கொண்ட தாம்புயமு மெனதுளம்விட் டகலாவே.

நெற்றிமே னிமிர் கண்ணுங் நிலாவொளிர்
பொற்றடம்புய நான்கும் பொருந்தரப்
பெற்றெம் மானருளாற் பிரம் பொன்றுகைப்
பற்று நந்தி பரிவொடு காப்பது.

திருக்கைலாயத்தில் நந்தியெம்பெருமான் செலுத்தும் அதிகாரத்தை இச்செய்யுள் கிளத்துவது. இக்கருத்தேகொண்டது பின்வரும் பெரியபுராணத் திருவிருத்தம்:—

நெற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர் நீறணி மேனிய ரநேகர்
பெற்றமேற் கொண்ட தம்பிரா னடியார் பிஞ்ஞக தன்னருள் பெறுவார்
மற்றவர் கெல்லாம் தலைமையாம் பணியும் மலர்க்கையிற் சுரிகையும் பிரம்பும்
சற்றைவார் சடையா ளருளினாற் பெற்றான் காப்பதக் கயிலைமால் வரைதான்.

குற்றமே தெரி வார்குறு மாமுனி
சொற்ற பாவினு மோர்குறைசொல் வாராற்
கற்றி லாவென் கவிவழு வாயினும்
உற்று நாடிவல் லோருய்த் துரைக்கவே.

இவ் வவையடக்கச் செய்யுளைத் திருவிளையாடற் புராணப் பின்வரும் பாடலோடு ஒப்பிடலாம்:—

நாயகன் கவிக்குக் குற்ற நாட்டிய சமுக மாந்தர்
மேயவத் தலத்தி னோர்க்கென் வெள்ளறி வுரையிற் குற்றம்
ஆயமா றர்தன றேனும் நீர்பிரித் தன்ன முற்றும்
தூயதீம் பாற்போற் கொற்சச் சுந்தரன் சரிதந்தன்னை.

இவை போல்வன பல.

## அமெரிக்காவுக்கு 'ராஜாஜி' தூது போகவேண்டும்

காராச்சிபி, 10

அமெரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியுள்ள டாக்டர் லோகநாதன்சமீபத்தில்பேசியபோது "இந்தியாவின்சுதந்திரமே உலகத்தின் நிசமான சுதந்தரமாயிருக்குமா வென்பதற்கு உரைகல்லாகும்; நமக்குப் பிரிட்டன் கிரந்தரமாக சதந்தரத்தை மறுக்கமுடியாது; ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியாரைப் போன்றவரை அமெரிக்கா முதலிய நாடுகளுக்குத் தூதாக அனுப்பவேண்டும். அவரே லட்சிய அரசியல்தூதராகக்கூடியவர்;' என்று குறிப்பிட்டுள்ளார்.

விளம்பரமின்றேல் பெரும்பணமில்லை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

யையும் அவளுக்குரிய சீதனம் நகை வகை பணம் எல்லாவற்றையும் அவனிடம் ஒப்புவித்தால் அவன் ஆறுமாசம் செல்வதற் கிடையில் அந்தப் பொருள் பண்டம் நிலம் புலம் நகைவகை யெல்லாவற்றையும் விற்று என்பிள்ளையையும் கட்டப் பாசிமணிக்கும் வகையில்லாமல் உடுக்கக் கந்தைக்கும் வகையில்லாமல் அவள் கலங்க, அவைகளையெல்லாம் தாசி வீட்டிற் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுவானல்லவா? அப்பொழுது நாயகன் மாத்திரமல்ல, நாயும் உன் மருமகளின் கதியை யிட்டுத் துயரப்படுவாய் தானே" என்று வெகு கவலையுடன் சொன்னார். கேட்ட தங்கை இடியேறு கேட்ட சர்ப்பம்போல் ஏக்கமடைந்தாள்; சிறிதுநேரம் யாதும் பேசாமலிருந்தாள்; அவள் கண்களிலிருந்து நீர் அருவிபோற் பெருகியது; தன் மகனைப்பற்றித் தமையன் சொன்னது முழுவதும் நிசமென்று நம்பினாள்; அந்த நேரத்தில் அவளுடைய மனம் பட்ட வேதனை தெய்வத்திற்குத்தான் தெரியும். அவள் சிறிது நேரம் அந்த விடத்திலேயே நின்றபடி யோசித்துவிட்டு, "சரி அண்ணா, நான் போய்வருகிறேன்; என் பிள்ளையிற் குறையிருக்க நான் எவரையுங் குறைசொல்லக்கூடாது, நீங்கள் இதையிட்டுக் கவலைப்படவேண்டாம்; நீங்கள் சொன்ன நியாயம் முழுவதுஞ் சரி; உண்மையில் என் மகனுடைய இந்த நடத்தையை நான் அறிந்திருந்தால் இந்த விஷயமாக உங்கள் வீட்டிற்கு இந்த நேரம் வந்திருக்கமாட்டேன்; உங்கள் பிள்ளை எனக்கும் பிள்ளைதான்; இவள் நல்லாயிருந்தாலும் பிற்காலத்தில் நான் இவளிடத்தில் வந்து ஒதுங்கியிருக்கவும் முடியும்; இந்தப் பெண்ணுக்கு நல்லவன் பெரியவனாய் குடியாதவன் வெறியாதவனாய் படித்தவனாய்க் குடிகுணத்திற் சிறந்தவனாய் தெய்வபக்தியுள்ளவனாய் ஒரு மாப்பிள்ளையைத் தேடிச் சம்பந்தஞ் செய்துவையுங்கள்; நானும் அதற்குத் துணையாயிருப்பேன்; அண்ணா இதனை நான் மனமார வாக்குக் கொடுக்கிறேன். ஒத்து உங்களுக்குச் சொல்லுகிறேன்; என்னை நம்புங்கள்; நான் போகிறேன்; ஆனாலும் நிச்சயமாய் இங்கு வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டு போகப் புறப்பட்டாள்; தங்கை சொல்லிய வார்த்தையைக் கேட்ட தமையனுடைய உள்ளம் உருகியது; "தங்காய், ஏன் அவசரப்படுகிறாய்; சற்றுத் தாமதித்துப் போகவொண்ணாதா? அப்படி அவசியம் போகவேண்டுமானால் என் வீட்டுக்காரியாகும் உன் மருமகளுக்குஞ் சொல்லிவிட்டுப் போகலாம்" என்று சொல்லிப் பின் தமது மனைவியைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்ல, மனைவி தன் மைத்துனியைத் தலைவாசற்புறத்திலிருந்து உள்வீட்டிற்குக் கூட்டிக்கொண்டுபோய் ஆசனமொன்றிலிருக்கச் செய்தாள்;

### "அன்றி யதுவரினும் வந்தெய்தும்"

தன்முகத்திற் கவலை தோன்றாதபடி மைத்துனியுடன் இருந்து வார்த்தையாடினாள்; இருவரும் பேசிக்கொண்டிருப்பதற்கிடையில் மருமகளாகிய விசாலாட்சி ஒரு பாத்திரம் நிறையத் தண்ணீர் கொண்டுவந்து வைத்துக்கொண்டு, "மாமி, எழுந்து கைகால் சுத்தப்பண்ணிக்கொண்டு இங்கே அடுக்களைப்பக்கம் வாருங்கள்" என்று சொல்லி அத் தண்ணீரை நீட்ட, மாமி தன் மருமகளை அன்புடனும் ஆர்வத்தோடும் பார்த்துக்கொண்டு பாத்திரத்தை

### வதிரி ஐக்கிய பண்டசாலை, கரவெட்டி

அநுபவமும் தமிழ் எழுத வாசிக்கத் தகுதியும் வாய்ந்த மனேஜர் தேவை. இரண்டு தகுதிப் பத்திரங்களோடு 18-2-45 க்கு முன் விண்ணம் செய்யவும். ரொக்கப் பிணை ரூபா 500 சம்பளம் தகுதிக்கேற்ப மாதம் ஒன்றுக்கு ரூபா 60 வரையில்.

விலாசம்

ஆ. பொன்னம்பலம்

காரியதரிசி

வதிரி ஐக்கிய பண்டசாலை, கரவெட்டி.

Mis 222, 12&15-2-45.

---

வாங்கிப் புறத்தே போய் வாயலம்பிக் கைகால் சுத்தி செய்துகொண்டு மீண்டுவர, மருமகள் தண்ணீர்ப் பாத்திரத்தை மாமியிடம் தான் வாங்கிக்கொண்டு அவளை அடுக்களைப்பக்கம் அன்புடன் அழைத்துச் சென்றாள்; ஆகாரம் அருந்த இருந்த மாமி தன் மருமகள் தனக்கு உணவு பரிமாறும்போது பாராட்டிய அன்பையும் பேசிய இதமான வார்த்தையையும் நின்ற விநயத்தையும் அவதானித்தாள்; உள்ளமுருகினாள்; இந்தப் பெண்ணுக்கு ஏற்ற நாயகனாகவிருக்கத் தன் மகன் தக்கவனல்லனென்று கருதினாள்; மகனைக்காட்டிலும் மருமகளிடத்து அன்பு அதிகம் வைத்தாள்; அவளை யறியாமலே அவள் கண்களில் நீர் ததும்ப, அவள் தன் முன்றானையைப் பற்றித் தன் கண்ணீரை ஒற்றினாள்; இதனை மருமகள் அவதானித்தாள்; "மாமி, ஏன் கவலைப்படுகிறீர்கள்? எதற்கும் கவலைப்படாதீர்கள்; எங்கள் எண்ணப்படி எல்லாம் நடக்குமென்றும் நடைபெறுமென்றும் நாம் எதிர்பார்த்திருக்க வொண்ணாது; "ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட்டொன்றாகும்; அன்றி யதுவரினும் வந்தெய்தும்"; அந்தப் பரமசிவனிடத்தில் நம்பிக்கை வைத்து அவனை அனுதினமும் வணங்கினால் அவன் எங்களை எவ்வகையான சஞ்சலமுமின்றிக் காப்பான் மாமி" என்று மகா ஞானம்போல் விசாலாட்சி மாமிக்கு உபதேசஞ் செய்ய, மாமியும் ஒருவாறு மனந்தேறினாள். அவள் போசனம் முடித்துக்கொண்டபின்னரும் சற்றுநேரம் அந்த வீட்டில் இருந்துவிட்டுத் தன் தமையன் மைத்துனி மருமகளாகிய மூவரிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு தன் வீட்டிற்கு மீண்டாள்; மீளும்பொழுது விசாலாட்சி "மாமி, இடையிடையே சுகத்தைப் பாராமல் இங்கே வந்துபோவீர்களா" என்று அன்புடன் சொல்லுதலும், "தவறாமல் வந்துபோவேனடியம்மா" என்று கூறிப் போயினள்; போகும் மார்க்கத்தில் தன் மகனைப்பற்றித் தமையன் சொல்லியவை நிசமோ அல்லவோ என்பதை யெண்ணியெண்ணிக் கிலேசப்பட்டுக்கொண்டு தன் இல்லத்தையடைந்தாள். "எதனையும் இருந்து ஆராய்ந்தறிவோம்" என்று சமாளித்துத் தன் மனத்தைத் தானே தேற்றினாள்; தாய் வரக் கண்ட விசுவநாதன் "அம்மா, வந்துவிட்டீர்களா! உங்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்; நான் ஒரு அலுவலாக அவசியம் போகவேண்டும்" என்னும் "போய்வா மகனே" என்று தாய் சொல்ல, அவன் இராசம்மாவிருக்கும் வீடு வந்துசேர்ந்தான்; அப்பொழுது மாலை நேரம் 6 மணிவரையிலிருக்குமென்னலாம். விசுவநாதன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த இராசம்மா அவனைக் கண்டதும் ஆனந்தமடைந்தாள்; "அண்ணா, வாருங்கள்" என்று இன்சொற் கூறி அழைத்து உபசரித்தாள். (வரும்)

மதிப்புரை

## வில்லி பாரதம்

### அருச்சுனன் தவநிலைச் சருக்கம் உரையுடன்

(உரையாசிரியர் பண்டிதர் ஸ்ரீ ம க. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள்; வெளியீடு ஸ்ரீ செ. சிவகுருநாதன் சைவப்பிரகாசயந்திரசாலை யாழ்ப்பாணம் விலை: ரூபா 1-25)

"குறும்பியளவாகக் காதைக் குடைந்து தோண்டி, எட்டியமட்டறுப்பதற்கோ வில்லியில்லை" எனப் போற்றப்பட்டவரும் பேரிப் புலவர்களின் எமனுமாகிய வில்லிபுத்தூராழ்வார் யாத்த மகாபாரதத்தில் ஆரணிய பருவத்து அருச்சுனன் றவநிலைச் சருக்கம் ஒரு சிறந்த பகுதியாகும். அருச்சுனன் தவநிலையைப் பொருளாகக் கொண்டு சைவ சித்தாந்த இரகசியங்களைக் கண்முன்னே துலக்குவது—தெய்வத்தன்மை, அசுரத்தன்மை, முனிவர் பெருமை, மனிதர் தருமம், வீரர் திறமை, பரமன் கருணை, பஞ்சாக்கர மகிமை முதலிய அரிய பெரிய விஷயங்களை நன்கு விளக்குவது. இதுகாறும் இச் சருக்கத்துக்கு உரை யில்லாதிருந்தது. இப்பொழுது இந்துக்கல்லூரி இயற்றமிழ்ப் போதகாசிரியரும், இந்துசாதனப் பத்திராசிரியருமாகிய பண்டிதர் திருஞானசம்பந்தப்பிள்ளையவர்கள் இச்சருக்கத்துள்ள 176 செய்யுட்களுக்கும் பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்பு என்பவற்றுடன் நூலாசிரியர் வரலாறு முதலியனவும்சேர்த்து வெளியிட்டிருக்கிறார்கள். இவ்வுரை முழுவதும் பண்டிதரவர்கள் அவ்வவ்விடங்களில் மேற்கோள் காட்டியும், தம்பொருள் நிறுத்தியும், நுண்பொருள்களைத் திருவியாராய்ந்து சொல்நயம் பொருள்நயம், சைவசித்தாந்தக் கருத்துக்கள் முதலிய பலவற்றையும் விளக்கிக் காட்டியிருப்பது புலவர்கட்கும் மாணவர்கட்கும் ஒருங்கே இன்பம் பயக்குந் திறத்தன.

அருச்சுனன் றவநிலைச் சருக்கம் ஆங்கில S. S. C, University Entrance முதலிய பரீட்சைகளுக்குப் பாடமாக விதிக்கப்பட்டுள்ளதாதலின் பண்டிதரவர்களின் உரைநூல் மேற்படி பரீட்சைகளுக்குப் படிக்கும் மாணவர்களுக்குப் பெரிதும் துணைபுரிவதாகும். ஆயினும் இவ்வுரைநூலின் சிறப்பு இதனைக் கலாசாலை மாணவர் கைக்கு மாத்திரமன்றி விழுப்பமுடைய தமிழ் உரைநடையை விரும்பிப் பயிலும் தமிழர் ஒவ்வொருவர் கைக்கண்ணும் சேர்ப்பிக்க மென்பது எமது துணிபாகும்.

— வீ, கே, பி, நாதன்

## விளம்பரம்

வடமாகாண அதிபரும், குவறன்டைன் நோய்ப் பாதுகாப்புச்சட்டப்படி (173 அத்தியாயம்) உரித்தான அதிகாரியுமாகிய சின்னப்பா குமாரசுவாமியாகிய யான் யாழ்ப்பாணப்பகுதி முழுவதையும் மற்றுந் தீவுகளையும், நெடுந்தீவுக் காரியாதிகாரியின் வட்டாரம் உட்பட நோயாற் பிடிக்கப்பட்ட பிரதேசமெனப் பிரகடனஞ் செய்கின்றேன.

2. ஒருவரும் இந்நோயுள்ள பிரதேசத்தைவிட்டு, வைத்திய அதிகாரிகளின் அனுமதிச் சீட்டின்றி வெளியே போதல் கூடாது, ஆனையிறவைக் கடந்து தூரப்போக வேண்டியவர்களுக்கு றெயில்வேச் சீட்டுக்கள் இவ்வனுமதிச் சீட்டிருந்தாற்றான் இப் பிப்ரவரிமீ 14-ந் தேதி தொடக்கம் கொடுக்கப்படும்.

3. கீழே குறிப்பிடப்பட்டுள்ள றெயில்வே ஸ்தலங்களில் டிை அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படும்.

வழங்கும் நேரம்

| | | |
|---|---|---|
| காங்கேசன்துறை | மாலை | 3—5.00 |
| சுன்னாகம் | ,, | 3—5.30 |
| யாழ்ப்பாணம் | ,, | 3—6.00 |
| நாவற்குளி | ,, | 3—6.30 |
| சாவகச்சேரி | ,, | 4—7.00 |
| கொடிகாமம் | ,, | 4—7 30 |
| பளை | ,, | 5—8.00 |

4. அம்மைப்பால் குத்தா திருப்பவருக்கு அனுமதிச் சீட்டு வழங்கப்படமாட்டா. ஆகவே, பிரயாணிகள் அனுமதிச் சீட்டுக் கேட்பதற்கு முன்பாகத் தங்களுக்கு அம்மைப்பால் குத்துவித்துக் கொள்ள வேண்டும். மேற்குறித்த றெயில்வே ஸ்தலங்களிலும் அரசினர்

## திருச்சி ரேடியோ

### வெள்ளி பெப் 16

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்ய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 திருச்சூர் எம் லக்ஷ்மி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 திருச்சூர் எம் லக்ஷ்மி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 என் எஸ் கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் பாட்டு 5-40 ஞான் ஷரீப் 6 குழிக்கரை எஸ் பிச்சையப்பா நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7.35 எம் எஸ் சரோஜினி † 7-45 தமிழில் செய்திகள் 8 அவன் சொன்ன கதை 8-15 குழிக்கரை எஸ் பிச்சையப்பா பிள்ளை நாகஸ்வரம் 8 40 என் எஸ் கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலக விவகாரங்கள் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### சனி பெப் 17

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 டி சூர்யகுமாரி † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 காலை இசை † 9 முடிவு.

1 கதம்பம் எம் பத்மநாதன் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஐரோப்பிய சங்கீதம் † 2-00 தமிழில் செய்திகள் 2-05 கலாநாதத்திலம் பாட்டு 2-30 முடிவு.

மாலை 5 எம் பத்மநாதன் வயலின் 5-40 திருவாசகக்கலம்பக விளக்கம் 6 சமலா நாகரத்தினம் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 ஸார்ஜண்ட் கல்வித் திட்டம் 7.30 அறிவிப்புகள் 7-35 என் எஸ் கிருஷ்ணன் டி ஏ மதுரம் † 7-45 தமிழில் செய்திகள் 8 மகாராவில் உன்னப்பு 9-15 தனம்மாள் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 எம் என் நடராஜ பிள்ளை புல்லாங்குழல் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### ஞாயிறு பெப் 18

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 எச் எம் வி வாத்ய கோஷ்டி † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-20 இசைக் கதம்பம் 9 முடிவு.

12 கதம்பம் † 1-30 ஒலிமலர் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மாதர் பக்கம் 2 தமிழில் செய்திகள் 2 05 பிற்பகல் இசை † 2-30 முடிவு.

மாலை 5 சேலம் ஜி தேசிகன் பாட்டு 5-40 தேவாரானை 6 சேலம் ஜி தேசிகன் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6.40 கிராம நிகழ்ச்சிகள் 7-10 நாளைய ஆசியா 7-30 அறிவிப்புகள் 7.35 எல் ஜி கிட்டப்பா 7-45 தமிழில் செய்திகள் 8 கே எஸ் நாராயணஸ்வாமி ஐயர் வீணை 9 சர்வகலாசாலைகளுக்கு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 10 இசைவேளை 10-30 முடிவு.

### திங்கள் பெப் 19

காலை 7.45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருவிளையாடற் கீர்த்தனைகள் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஆர் சோமசுந்தரம்பிள்ளை 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 எம் எஸ் விஜயாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 ஆர் சோமசுந்தரம்பிள்ளை நாகஸ்வரம் 5-40 இசைப் பயிற்சி 6 எம் எஸ் விஜயாள் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 மகாமாயா † 7-30 அறிவிப்புகள் 7-35 வம்பு வேண்டாம் 7-45 தமிழில் செய்திகள் 8 டி கே ரங்காச்சாரி பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 படப்பாட்டுகள் 10 இசைவேளை † 10.30 முடிவு.

---

வைத்தியசாலைகளிலும் இலவசமாக அம்மைப்பால் குத்தப்படும்.

சி. குமாரசுவாமி,

வடமாகாண அதிபர்.

யாழ்ப்பாணம், 12 பிப்ரவரி 1945.

(G. 112, 15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டைவேலிக் கோவிற்பற்று

3ம் பக்கத் தொடர்ச்சி

## விசேஷித்த இடங்கள்

1. தபாற்கந்தோர், 2. சந்தைகள் 3. கிறீஸ்த தேவாலயம், 4. சைவக் கோவில்கள், 5. வற்றாத நீரூற்று.

### தபாற் கந்தோர்

இங்கு காகிதம் ஏற்று அனுப்புதல், தந்தியடித்தல், மணிஓடர் அனுப்பல், பொருட்பொதி அனுப்பல் முதலிய தொழில்கள் நடைபெறுகின்றன. இது கரவெட்டிப் பகுதியில் மத்தியிலுண்டு.

### சந்தை

பெரும்பாலும் 2 சந்தைகள் உண்டு. இவை இரண்டு ஊரின் மத்தியில் உண்டு. ஒன்று பகலில் கூட்டப்படும், ஒன்று இரவில் கூட்டப்படும்.

### கிறீஸ்தவ தேவாலயம்

விசேஷித்தது கரவெட்டியில் அமைக்கப்பட்டுள்ளது கிறீஸ்தவர் அத்தேவாலயத்தைத் தமது பரிசுத்த ஸ்தலமாக மதிக்கின்றனர்.

### சைவக்கோயில்

(1) வல்லிபுரம், (2) அம்மன் கோவில், (3) கிராய்ப்பிள்ளையார் கோவில்.

(1) இது வல்லிபுரம் என்ற பகுதியில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இது ஓர் விசேஷ ஸ்தலம் இதைப் பற்றிய வரலாற்றுக் கதைகள் பல உள. அவற்றின் ஒன்று ஈண்டுக் குறிப்பிடுதும்.

ஆதிகாலத்தில் ஓர் கிழவி கடற்கரையாற் சென்று கொண்டிருக்கையில் ஓர் பிதவைப் பேழை கடற்கரையில் ஒதுக்கப்பட்டுக் கிடந்ததாம். அதை அக்கிழவி எடுத்துப் பார்த்தபோது ஓர் உருவம் பொன்னால் ஆக்கப்பட்டதாகக் கிடந்ததாம் அதை அக்கிழவி எடுத்துக் கொண்டு வந்து வல்லிபுரம் என்ற இடத்தில் வைத்துவிட்டு நீர் அருந்தச் சென்றாளாம் பின் வந்து அப்பெட்டியை எடுக்க எடுக்க முடியாதிருந்ததாம் உடனே அதை அவ்விடத்தில் வைத்து ஓர் கோவிலாக கட்டுவித்தாளாம் அக்கோவிலே இப்போது கூறப்பட்ட கோவிலாகும்.

### 2. அம்மன்கோவில்

இது தல்லையடபதியின் மத்தியில் இருக்கின்றது. இதைப் பற்றிய ஆராய்ச்சியில் ஷை கூறுகின்றனர்.

இக்கோவிலின் அருகாமையில் ஓர் உயர்ந்த மலைபோன்ற திடர் இருக்கின்றது. அம்மலையில் உச்சியில் ஓர் பெரியதுவாரம் இருந்ததாம் அத்துவாரத்தில் ஒரு சிறுமைக்கு இரண்டுதரம் வெளிச்சம் தோன்றுமாம். அதைப் பார்க்க அவ்விடம் செல்லும்போது அவ்வெளிச்சம் அணைந்துவிடுமாம் இப்படியாகப் பல நாட்களாக ஆராய்ந்தவர் ஓர் வெளிவராத தன்மை ஆந்த இடத்தில இருந்து இவதாரணம் சமயம்போது ஓர் செப்பேடு காணப்பட்டதாம் அதை எடுக்க முயன்றபோது முடியாமையால் அதில் ஒரு சேப்புரத்தைக் கட்டிவழிபட்டு வந்தார்களாம் கரவெட்டிப் பகுதியில் அதிக விசேஷ தேவாலயமாக வழங்கப்பட்டு வருகின்றவை முன் கூறப்பட்ட 3 கோவில்களாகும்.

### சங்கங்கள்

1. கிராமக்கோடு, 2. ஐக்கிய நாணய சங்கம், 3 கிருஷிக சங்கம், 4. இந்துவாலிப சங்கம், 5, கிராமச சங்கம்.

### கிராமக்கோடு

இது தபாற்கந்தோருக்கு அதிக கிட்டவாக அமைந்துள்ளது. இங்கே அந்த நாட்டின் நல்நிலைக் கேற்ற சிறிய வழக்குகள் விசாரிக்கப்படும் 20 ரூபா அல்லது 2 கிழமை மறியல் சிறுபிள்ளைகளானால் ? அடியும் வழங்கப்படும்.

### 2. ஐக்கியசங்கம்

2 சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன, இச்சங்கங்கள் கமக்காரருக்கும் தொழிலாளருக்கும் அதிக உதவிபுரிந்துகொண்டு இருக்கின்றன இதனால் நம்நாடு ஒரு அளவுக்கு மேனிலை யடைந்து வருகின்றன எனலாம்.

### 3 கிருஷிக சங்கம்

தோட்டக்காரரின் நன்மை கருதிப் போதனையின் உபசிரிவின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது இது கமக்காரருக்கு வேண்டிய பல விதமான பொருட்களையும் கொடுத்து அவர்களை அதிக ஊக்கப்படுத்தி வருகின்றது.

### 4 இந்துவாலிபர் இயக்கம்

சைவசமயத்தை உயர்நிலைக்குக் கொண்டுவரும் நோக்கமாக உள்ள சனங்கள் மேற்படி ஒன்றை உண்டாக்கி யுள்ளனர். இச்சங்கம் சைவசமய விடையமான பல பரீட்சைகளை அவர்களுக் கேற்படுத்தி அவர்களை உன்னத நிலைக்குக்கொண்டு வர முயற்சிசெய்து வருகின்றது.

### சரித்திரசம்பந்தமான விஷயங்கள்

'வல்லிபுரம்' என்ற இடத்திற் சரித்திர சம்பந்தமான சில பொருட்கள் எடுக்கப்பட்டதாம்.

1. போத்துக்கீசர் வழங்கிய நாணயம்,
2. அவர்கள் கட்டிய கோட்டையின் சிதைந்த பகுதி.
3. ஆராய்ச்சி நூலார் 'காவற்கட்டையும் வல்லிபுரத்தை'யும் சேர்த்து மணிமேகலையின் சம்பவம் நடைபெற்ற இடமென ஆராய்ந்து கூறுகின்றனர்,
4. ஆன்னாலை தெற்கில் சிங்களவரை மறியலில் வைத்த இடம் ஒன்று இருக்கின்றது. அது அழிந்து செடிகள் உண்டாகிப் பற்றை போல் தோற்றுகின்றது.

நம்நாட்டாரின் முயற்சியால் இனிமேல் செய்யத் தக்கதான தொழில்கள்.

1. கண்ணாடிக் கைத்தொழில், 2. சீனிசெய்தல், 3 பால் சம்பந்தமான தொழில், 4. மந்தை விருத்தி, 5. பனம்பாகு.

### 1. கண்ணாடித்தொழில்

1932-ம் ஆண்டு ஆனி மாசம் வல்லிபுரக் கோவில் மணலில் கண்ணாடி செய்யலாம் என ஆராய்ச்சியாளர் ஆராய்ந்தனர். பின் அவ்வாராய்ச்சி கைகூடவில்லை முயற்சி செய்தால் அப்பகுதி அத்தொழிலுக்கு விசேஷித்த இடமாகவரும்.

### 2. சீனி செய்தல்

1941-ம் ஆண்டு புலோலியிலும் 1912-ம ஆண்டு தம்பசெட்டியிலும் கருப்பனீரிலிருந்து சீனி தயாரித்தார்கள். அதுபோல இப்பகுதியில் உண்டாக்கலாம்,

### ஞாபகார்த்த விஷயம்

1. கட்டைவேலித் தேவாலயம். ஒல்லாந்தர் காலத்திற் கட்டப்பட்டது. ஏறக்குறைய 100 வருடங்களுக்கு முன் கட்டிய இக்கட்டிடம் சிதையாது இன்றும் நிலவிவருகின்றது.

2. கரவெட்டி (நெல்லியடி) R. C. தேவாலயம் போத்துக்கீசர் அவ்விடம் இருந்தார்கள் என்று எமக்கு விளக்கிக் கொண்டிருக்கின்றது.

3. அல்வாய் வடக்கில் உள்ள இடிந்த R. C. தேவாலயம் இது போத்துக்கீச காலத்திற் சமைக்கப்பட்ட தென ? ? னர்.

# தேசியப் போர் முன்னணியைக் கலைக்க வேண்டுமாம்!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூலம் பெறுபவைகள் காங்கிரஸ் பத்திரிகைகள் என்று கூறுபவைகள்தான்."

ஸ்ரீபலித் சௌத்ரி (முஸ்லீம் லீக்) சபையில் முதன்முதலாகப் பேசுகையிற் கூறியதாவது:—

"நான் அசாமில் இந்த முன்னணியின் ஜில்லாத் தலைவராக இருந்தேன். இந்தத் தேசிய போர் முன்னணி நடத்தும் முக்கிய வைபவம் வருடாந்த அணிவகுப்புத்தான். அப்பொழுது நிதி எவ்வளவு கையிருப்பில் இருக்கிறது என்று அதிகாரிகள் கணக்குப்பார்த்துப் பாக்கியுள்ளவற்றை அந்த அணிவகுப்பில் செலவு செய்துவிடுகிறார்கள். இவர்களுடைய அணிவகுப்பு, ஜனங்கள் பெரிதும் கஷ்டப்பட்டுவரும் ஒரு கிராமத்திற்கு 0 மைல் தூரத்தில் தான் நடைபெறுகிறது.

இந்தப் பணத்தைக் கிராமவாசிகளின் நிவாரணத்திற்கு உபயோகிக்கலாம் என்ற யோசனை உதறித் தள்ளப்பட்டது. பிரசாரத்திற்காக உத்தேசிக்கப்பட்ட பணத்தை வேறுகாரியத்திற்காகச் செலவு செய்யக்கூடாதென்று கூறி ரூபா 12,000 இந்த அணிவகுப்புக்குச் செலவு செய்யப்பட்டது. ஸ்ரீபாலித் சௌத்ரி மேலும் பேசுகையில் தேசிய முன்னணியின் பண உதவியால் அசாமில் நடத்தப்பட்டுவரும் பத்திரிகைகள் ஒவ்வொரு வாசிகசாலையிலும் தரையிற் கிடந்து மிதிபடுகிறது.

இதை நான் அதிகாரிகளுக்கு எடுத்துக் காட்டியபோது, அதிகாரிகள் ஒருவருக்குச் சம்பளம் கொடுத்து அதை ஜனங்களுக்கு வாசிக்க உத்தரவுப்படி செய்தனர். விளக்கு வெளிச்சத்திற்கும் அறைக்கும் பணம் கொடுக்கப்படுகிறது. ஆனால், வாசிப்பதைக் கேட்க ஒருவரும் வருவதில்லை.

ஸ்ரீ சாமிவெங்கடாசலம் செட்டியார் பேசுகையில் கூறியதாவது:—

"தேசியப்போர் முன்னணியை இன்னும் வைத்திருக்க வேண்டியது அவசியமா? அது சாதித்ததென்ன? காங்கிரஸ்மீது ஸ்ரீஜம்னாதாஸ் மேத்தாவும் ஸேர். கவாஸ்ஜீ ஜஹாங்கிரும சாட்டிய குற்றச்சாட்டுகள் புதியனவல்ல. அரசினர் பல தடவை கூறியவையே அவர்கள் திருப்பக்கூறியிருக்கின்றனர், பாஸிஸத்திற்கும்,நாஸிஸத்திற்கும் காங்கிரஸ் தலைவர்கள் விரோதிகள் என்பதையும், இந்தியா சுதந்திர நாடாக நடத்தப்பட வேண்டுமென்பதில் அவர்கள் ஒரேவிருப்பம் என்பதையும் இந்தக் குறைகூறுபவர்கள் மறந்துவிட்டனரா?


# புதியதினிசுகள் யாவும் இங்குள்ளன!

இந்தியாவிலுள்ள நாகரீக வட்டாரத்திலுள்ள அழகான புடவைகள்

யாவும் புதியன — யாவும் கண் கவர்வன

வந்து ஒருதரம் பார்வையிட்டால் ஒன்றிற்கு மேற்படவே வாங்குவீர்கள்

நாகரீக நங்கைக்கும் — மணப் பெண்ணுக்கும் ஏற்றவை

எவ்விழாவிற்கு முகந்த பட்டுக்கள்

ஜாரி - ஜோர்ஜெற் - ஒர்கென்ஸா

நைநோன் - ரிஷ்யூ - பிஷ்நெற்

எம்புறொய்டேட் நெற் முதலியன

## நொவெல்ற்றி ஸில்க் ஸ்டோர்

பெனரிஸ் பட்டுக்கள் ஏராளமாகத் தருவிப்போர்.

பெருந்தெரு, யாழ்ப்பாணம்.



## மாதருக்கு ஒரு வரப்பிரசாதம்

டாக்டர். எஸ். சி. பாலின் "சாந்தன் றக்ஷா"

அகாலப் பிரசவத்தை முற்றாகத் தடுத்து பாதுகாப்பும் சௌக்கியமுமான சாதாரண பிரசவத்தை உறுதியாக ஏற்படுத்துவதற்கு ஒரு அற்புதமான கைகண்ட தைலம், டாக்டர். எஸ். சி. பாலின் "சாந்தன் றக்ஷா" கற்ப ஸ்திரீகளுக்கு ஆரம்பத்திலேயே பரிதாபகரமான வியாதிகளாகிய வாந்தி, (காலை வியாதி) முதலியவற்றை தடுத்து மற்றும் நாட்சென்ற கற்ப வியாதிகளைக் குணப்படுத்துவதுமல்லாமல் இரத்தக் கசிவைக் கட்டுப்படுத்தி, கர்ப்பக்குடலிலிருந்து இரத்தக்கறையையும் பல சிக்கல்களையும் கற்பப் பையில் புகுந்து அதனிமித்தம் அபாயகரமான இரத்தக்கேடு உண்டு பண்ண விடாமல் காப்பாற்றுகிறது.

மேற்படி தைலத்தை வெளிப்பூச்சுக்கு மட்டுமே உபயோகிக்கலாம், மாதரின் கற்பகாலங்களில் இத்தைலம் விலைமதிக்கத் தகாத ஒரு வரப்பிரசாதமாகும். நூற்றுக்கணக்கான எதிர்பாராத சிபார்சுக் கடிதங்கள் பார்வைக்கிருக்கின்றன.

ஒரு ஸ்டாண்டார் சைஸ் போத்தல் விலை ரூபாய் 4—75.

டாக்டர், எஸ். சி. பால் அண்டு சன்ஸ், கல்கத்தா.

ஏக விநியோகஸ்தர்கள்:

கொன்சிஸ்ரறி ஸ்டோர்ஸ், 59 சாய்ப்புத்தெரு கொழும்பு.

யாழ்ப்பாணத்தில்: ஓரியண்டல் இம்போட்கம்பெனி

28, நம்பர் சாய்ப்புத் தெருவில் பெற்றுக்கொள்ளலாம்.

H. 131 12-10-44—


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 15, February, 1945.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org